ஜனநாயகத்தில் மக்கள்தான் எஜமானர்கள் என்பதை பிரதமர் மோடி மறந்துவிடக் கூடாது

மு.க.ஸ்டாலின் பேச்சு

தருமபுரியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். (இடது) கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள்.

தருமபுரி, மார்ச் 29: ஜனநாயகத்தில் மக்கள்தான் எஜமானர்கள் என்பதை பிரதமர் மறந்துவிடக் கூடாது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

தருமபுரி அருகே தடங்கத்தில், தனியார் கல்லூரி மைதானத்தில் திமுக கூட்டணி சார்பில், தருமபுரி, கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரசார பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில், தருமபுரி மக்களவைத் தொகுதி திமுக வேட்பாளர் ஆ.மணி, கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கே.கோபிநாத் ஆகியோரை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது:

வரும் மக்களவைத் தேர்தல் இந்திய வரலாற்றில் மிக முக்கியமான தேர்தலாகும். இத் தேர்தலில் நீங்கள் அளிக்கும் வாக்குகள், தமிழகத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்க அளிக்கும் வாக்குகளாகும். நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை தொடர வேண்டும். சமத்துவம் எங்கும் மலர வேண்டும். அரசமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக பாஜக வீழ்த்தப்பட வேண்டும்; இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டும்.

பாஜக என்பது சமூகநீதிக்கு எதிரான கட்சியாகும். சமத்துவத்தை அழித்து, ஜாதி, மதம், இனத்தால் மக்களவைப் பிளவுபடுத்தும் பாஜகவை மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் செய்ய வேண்டிய கடமை தமிழகத்துக்கு அதிகம் உள்ளது.

வன்னியர் சமூகத்துக்கு இடஒதுக்கீடு வழங்கியது திமுக: வன்னியர் சமுதாய மக்கள் 1987-ஆம் ஆண்டில் இட ஒதுக்கீடு கோரி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அப்போது ஆட்சியில்இருந்த அதிமுக அந்தசமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கவில்லை. அதைத் தொடர்ந்து தமிழகத்தில் ஆட்சி அமைத்த திமுக 1989-இல் வன்னியர் சமூகம் உள்பட மிகவும் பிற்பட்ட சமூக மக்களுக்கு 20 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கியது. மேலும், இடஒதுக்கீட்டுப் போராட்டத்தின்போது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டன.

அந்தப் போராட்டத்தில் உயிரிழந்த 21 பேரின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் கருணைத் தொகை வழங்கப்பட்டது. தவிர, மாதம் ரூ. 3 ஆயிரம் உதவித் தொகை தற்போது வரை வழங்கப்பட்டு வருகிறது. அதில் உயிரிழந்தவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் மணிமண்டபம் விழுப்புரத்தில் கட்டப்பட்டு வருகிறது.

வன்னியர் சமூக மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியதற்காக அப்போதைய முதல்வர் மு.கருணாநிதிக்கு, மருத்துவர் ச.ராமதாஸ் பாராட்டு விழா நடத்தினார். சமூக நீதி பேசும் பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ், சமூக நீதிக்கு நேர் எதிரான பாஜகவுடன் கூட்டணி அமைத்து ஏன்?

ஜாதிவாரி கணக்கெடுப்பு ஏன் நடத்தவில்லை? தன்னுடைய ஆட்சிக் காலத்தில் பிரதமர் நரேந்திர மோடி ஜாதிவாரிக் கணக்கெடுப்பை ஏன் நடத்தவில்லை? தற்போது 'மோடி உத்தரவாதம்' என விளம்பரம் செய்கின்றனர். அவரது உத்தரவாதத்தில், இடஒதுக்கீட்டு உச்சவரம்பை உயர்த்த வாக்குறுதி அளிக்கப்படுமா? இந்த உத்தரவாதத்தை பாமக நிறுவனர் ராமதாஸ் பிரதமரிடமிருந்து பெற்றிருக்கிறாரா? ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் எடுக்கப்பட்ட ஜாதிவாரி கணக்கெடுப்பைக் கூட வெளியிடாமல் முட்டுக்கட்டை போட்டது பாஜகதான்.

மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றிய திட்டங்கள்: பள்ளிகளில் காலை உணவுத் திட்டம், மகளிருக்கு இலவச பேருந்து பயணத் திட்டம், தோழி மகளிர் விடுதி, புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் என பல சிறப்பான திட்டங்கள் திமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மக்களவைத் தேர்தல் வாக்குறுதிகள்: பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை குறைக்கப்படும். சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும். ஜிஎஸ்டி சட்டத்தில் சீர்திருத்தம் செய்யப்படும். விவசாயிகள் பெற்ற கடனும் வட்டியும் தள்ளுபடி செய்யப்படும். உழவர்களின் வேளாண் விளைபொருள்களுக்கு மொத்த உற்பத்திச் செலவுடன் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்படும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச்சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாள்கள் 100-லிருந்து 150 நாள்களாகவும், ஊதியம் ரூ. 400 ஆகவும் உயர்த்தப்படும்.

தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் வசிக்கும் 'வால்மீகி' இன மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவர். 'குன்னுவார்' இனமக்களும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

ஒசூரில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும். சூசுவாடி முதல் இரண்டாவது சிப்காட் வரை பறக்கும் சாலை அமைக்கப்படும். கிருஷ்ணகிரியில் ரயில் நிலையம் அமைக்கப்படும். ஜோலார்பேட்டை, ஒசூர் ரயில் சேவை கிருஷ்ணகிரி வழியாகத் தொடங்கப்படும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

ஒசூர், கிருஷ்ணகிரி, சென்னை ரயில் சேவை தொடங்கப்படும். சிப்காட்டில் மானியத்துடன் கூடிய ஐம்பது ஏக்கர் நிலம் விசைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கித் தரப்படும். ஒசூரில் இருந்து பெங்களூருக்கு மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒசூர்-தளி சாலையில் ரயில் மேம்பாலம் அமைக்கப்படும். மொரப்பூர் ரயில் நிலையத்தையும் தருமபுரி ரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் புதிய அகல ரயில் பாதை அமைக்கப்படும்.

மாநில உரிமைகளைப் பறிக்க பிரதமர் துடிப்பு: 12 ஆண்டு காலம் குஜராத் முதல்வராக இருந்து, மாநில உரிமைகளைப் பற்றிப் பேசிய மோடி, பிரதமரானதும், மாநிலங்களை அழிக்கத் துடிக்கிறார். மொத்த அதிகாரத்தையும் தானே வைத்துக்கொள்ள வேண்டும் என உரிமைகளைப் பறிக்க நினைக்கிறார். பிரதமர் மோடி மக்களுக்கு எஜமானர் அல்ல! மக்கள்தான் உங்களுக்கு எஜமானர்கள்! அதை மறந்துவிடக் கூடாது.

பாஜகவுடன் வெளிப்படையாகக் கூட்டணி அமைத்திருப்பவர்களும், கள்ளக் கூட்டணியாக தமிழகத்துக்கு துரோகமிழைக்கும் அதிமுக கூட்டணியும் இத் தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டும். இத் தேர்தலில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றார்.

முன்னதாக அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்வரவேற்றுப் பேசினார். இதில், அமைச்சர் அர.சக்கரபாணி,சட்டப்பேரவை உறுப்பினர்கள் டி.ராமசந்திரன் (தளி), தே.மதிழகன் (பர்கூர்), ஒய்.பிரகாஷ் (ஒசூர்), தருமபுரி திமுக மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்ரமணி (கிழக்கு), பி.பழனியப்பன் (மேற்கு), காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வீ. தங்கபாலு, சேலம் மக்களவைத் தொகுதி திமுக வேட்பாளர் டி.எம்.செல்வகணபதி, தருமபுரி மக்களவை உறுப்பினர் டிஎன்விஎஸ்.செந்தில்குமார், ஒசூர் மேயர் எஸ்.ஏ.சத்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

9 இடங்களில் வெயில் சதம்

சென்னை, மார்ச் 29: தமிழகத்தில் வெள்ளிக்கிழமை (மார்ச் 29) 9 இடங்களில் வெயில் சதமடித்தது.

சென்னை வானிலை மையம் சார்பில்வெள்ளிக்கிழமைவெளியிட்ட அறிவிப்பு: தென் இந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக செவ்வாய்க்கிழமை, மற்றும் வியாழக்கிழமை(ஏப்.2,4) தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகம்,புதுவை மற்றும் காரைக்கால் பகுதியில் சனி முதல் திங்கள்கிழமை(மார்ச் 30- ஏப்.1) வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்.அடுத்த ஐந்து தினங்களில் 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக அதிகரிக்கக் கூடும்.

9 இடங்களில் வெயில் சதம்: பதிவான வெப்ப அளவு (பாரன்ஹீட்): ஈரோடு-104, பரமத்தி வேலூர்-102.56, தருமபுரி-102.2, சேலம்-101.84, திருச்சி- 101.66,வேலூர்-101.12, திருத்தணி-100.94, மதுரை நகரம், மதுரை விமான நிலையம்-100.76.

கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக

எடப்பாடி கே. பழனிசாமி

மதுரை மக்களவைத் தொகுதி அதிமுக தேர்தல் பணி அலுவலகத்தை வெள்ளிக்கிழமை திறந்துவைத்து, குத்துவிளக்கேற்றிய அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி.

மதுரை, மார்ச் 29: கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி தெரிவித்தார்.

மதுரையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் தமிழகத்தில் ஒரே அலைதான் வீசுகிறது. அது, அதிமுக கூட்டணிக்கான ஆதரவு அலை. முந்தைய அதிமுக அரசின் சாதனைகளை விளக்கிக் கூறி, அடுத்து நிறைவேற்றவுள்ள பணிகளுக்கு வாக்குறுதி அளித்து மக்களிடம் வாக்குகள் கோருகிறோம். அதிமுக கூட்டணிக்கு தமிழக மக்களிடம் அமோக வரவேற்பு உள்ளது.

இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள், தேர்தல் கால சூழலுக்கேற்ப கூட்டணி அமைத்துக் கொள்வது வழக்கம். அந்த வகையில்தான், முன்பு அதிமுக, பாஜக கூட்டணி அமைந்தது. கூட்டணியில் உள்ள கட்சியையே விமர்சிக்கும் வழக்கம் திமுகவுக்கு உண்டு. ஆனால், அதிமுகவுக்கு அந்த வழக்கம் கிடையாது.

அதிமுகவை நம்பி வந்து கூட்டணி அமைத்தவர்களுக்கு இறுதிவரை விசுவாசமாக இருப்போம். கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக. அதனால்தான், கூட்டணியில் இருக்கும் வரை பாஜகவை விமர்சிக்கவில்லை. தற்போது, அந்தக் கூட்டணியிலிருந்து விலகிவிட்டோம், விமர்சிக்கிறோம். தமிழக நலனுக்கு எதிரான நடவடிக்கைகளை விமர்சிப்பதுடன்,முறியடிக்கவும் செய்வோம்.

கருத்துக் கணிப்பு என்ற பெயரால் அதிமுவுக்கு எதிரான பிரசாரத்தை சிலர் திட்டமிட்டு பரப்புகின்றனர். தமிழகத்தில் அதிமுகவுக்கான மக்கள் செல்வாக்கு உயர்ந்துள்ளது என்பதே உண்மையான கள நிலவரம் என்றார் அவர்.

தேர்தல் பணி அலுவலகம் திறப்பு

முன்னதாக, மதுரை கே.கே. நகரில் அமைக்கப்பட்டுள்ள அதிமுக தேர்தல்பணி அலுவலகத்தைஎடப்பாடி கே. பழனிசாமி திறந்துவைத்து, குத்துவிளக்கேற்றினார். பிறகு, மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் உருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே. ராஜூ, ஆர்.பி. உதயகுமார், அதிமுக வேட்பாளர் மருத்துவர் பா. சரவணன், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சார் பதிவாளர் அலுவலகங்கள் இன்று இயங்கும்

சென்னை, மார்ச் 29: தமிழகத்தில் அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களும் சனிக்கிழமை (மார்ச் 30) இயங்கும் என்று பதிவுத் துறை தெரிவித்துள்ளது.

தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் முக்கியத் துறைகளில் பதிவுத் துறையும் ஒன்றாகும். விழாக் காலங்கள், சுப தினங்கள் ஆகியன விடுமுறை நாள்களிலும் வந்தாலும் சார் பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதனால், கடந்த நிதியாண்டுகளைக் காட்டிலும் பதிவுத் துறை மூலமாக அரசுக்கான வருவாய் உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

வெள்ளி, சனி, ஞாயிறு தொடர் விடுமுறை என்றாலும், சனிக்கிழமை (இன்று) சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, நிகழ் நிதியாண்டின் இறுதி மாதமான மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமை (மார்ச் 30) அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும் இயங்கும் என்று பதிவுத் துறை தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொள்கைக்காக பாடுபடும் கட்சி பாமக

மருத்துவர் ச.ராமதாஸ்



விருத்தாசலத்தில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கடலூர் மக்களவைத் தொகுதி பாமக வேட்பாளர் தங்கர் பச்சானை ஆதரித்துப் பேசிய அந்தக் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ்.

நெய்வேலி, மார்ச் 29: கொள்கைக்காக பாடுபடும் கட்சி பாமக என்று அந்தக் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் கூறினார்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் வெள்ளிக்கிழமை இரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், பங்கேற்ற ராமதாஸ், கடலூர் மக்களவைத் தொகுதி பாமக வேட்பாளர் தங்கர் பச்சானை ஆதரித்து வாக்கு சேகரித்து பேசியதாவது:

உலகமே வியந்து பார்த்து அதிசயிக்கும் மனிதர் பிரதமர் மோடி. நேரு குடும்பத்தில் ஜவாஹர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோர் 3 முறை பிரதமர்களாக இருந்தனர். தற்போதைய மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றிபெற்று, பிரதமர் மோடி 3-ஆவது முறையாக மீண்டும் பிரதமராக பதவியேற்பார்.

காங்கிரஸ் கொள்கைகள் நாட்டு மக்களுக்கு தேவையில்லாதது எனக் கூறி, அந்தக் கட்சியை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகத்தான் திமுகவை அண்ணா தொடங்கினார். இப்போதெல்லாம் யார் யாரோ கட்சி தொடங்குகின்றனர். கொள்கை தெரியாமல் பல்வேறு கட்சிகள் உள்ளன. பாமக அன்று முதல் இன்று வரை கொள்கைகளுக்காகவும், அவற்றை நிறைவேற்றவும் தொடர்ந்து பாடுபட்டு வரும் கட்சி. பிரதமர் மோடியை எனக்குப் பிடிக்கும். என்னை அவருக்கு ரொம்பப் பிடிக்கும். தமிழகத்தின் மூத்த தலைவர் எனக்கூறி, என்னை கட்டித் தழுவினார். எந்தப் பதவிக்கும் போவதில்லை என்று சத்தியம் செய்து 85 வயது வரை அதைக் காப்பாற்றி வருகிறேன்.

கடலூர் மக்களவைத் தொகுதி பாமக வேட்பாளராக தங்கர் பச்சானை தேசிய ஜனநாயகக் கூட்டணி களமிறக்கியுள்ளது. இவர் வெற்றிபெற்றால், மாவட்ட வளர்ச்சிக்கு என்ன தேவை என்பதை துல்லியமாக திட்டமிட்டு நிறைவேற்றுவார். தங்கர் பச்சானின் செயல்பாடு மக்கள் சார்ந்து அற்புதமாக இருக்கும் என்றார்.

U GRO கேப்பிட்டல் லிமிடெட்

4ஆவது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், LBS சாலை, குர்லா, மும்பை 400070.

சுவாதீன அறிவிப்பு – இணைப்பு – IV (பாக்க விதி – 8(1)) (அசையாச் சொத்துக்கானது)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் 4ஆவது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், LBS சாலை, குர்லா, மும்பை 400070 எனும் முகவரியில் பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள UGRO கேப்பிட்டல் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (54/2002) பிரிவு 13(12)–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3–இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையை வட்டியுடன் சேர்த்து அவ்வறிவிப்புக் கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். மேற்படி கடன்தாரர்கள் அத்தொகையினை திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (4) ஆகியவற்றின் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8–இன் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்தியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது UGRO கேப்பிட்டல் லிமிடெட் நிறுவனத்துக்கு தொகையை அதன் வட்டியுடன் சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)–இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரர்கள் இதன் மூலம் அழைக்கப்படுகிறார்கள்.

கடன்தாரர் விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	சுவாதீன நாள்
1. M/S ஜியா மெர்ச்சன்டைசர்ஸ் பிரைவேட் லிமிடெட், 2. R P லீலா எக்ஸ்போர்ட்ஸ், 3. ஜவஹர் ராஜன் ராஜகோபால், 4. ரேவதி சங்கர். கடன் கணக்கு எண்: HCFCHESEC00001025022	கோரிக்கை அறிவிப்பு நாள் 08.01.2024 தொகை: ரூ.1,61,15,296/– 05.01.2024 நாளிட்டது	28.03.2024

அடகு வைக்கப்பட்டுள்ள சொத்து

இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய அசையாச் சொத்தாகிய நிலம் மற்றும் அங்குள்ள கட்டட கட்டுமானம். அமைவிடம் – ஆவலப்பள்ளி கிராமம், ஒசூர் வட்டம், ஒசூர் சார்பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், தற்போது ஒசூர் மாநகராட்சி எல்லைகள், ஒசூர். 1. சர்வே எண் 794, புஞ்சை பரப்பளவு ஏக்கர் 4.41 சென்ட், தீர்வை ரூ.1.94 ந.பை., இதிலடங்கிய புதிய உட்பிரிவு சர்வே எண் 794/3, புஞ்சை பரப்பளவு ஹெக்.0.16.0, தீர்வை ரூ.0.17. 2. சர்வே எண் 820, புஞ்சை பரப்பளவு ஏக்கர் 6.85 சென்ட், தீர்வை ரூ.3.01 ந.பை., UDR–இன்படி சர்வே எண் 820/11, புஞ்சை பரப்பளவு ஹெக்.0.28.0, தீர்வை ரூ.0.30 ந.பை. இதிலடங்கிய புதிய உட்பிரிவு சர்வே எண் 820/11A1. மேற்படி நிலங்கள் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டது, இதிலடங்கிய பரப்பளவு 3140 சதுர அடி. எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: திரு. ஜெயப்பிரகாஷ் அவர்களின் நிலம், மேற்கு: ஒசூர்–ஆவலப்பள்ளி பிரதான சாலை, வடக்கு: 20 அடி அகலமுள்ள சாலை, தெற்கு: சர்வே எண் 794/3. இந்த எல்லைகளுக்கிடையே உள்ள 1ஆவது துண்டு அளவு (மொத்தம் 2680 சதுர அடி): கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் – 67.00 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் – 67.00 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் – 40.00 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் – 40.00 அடி. இந்த எல்லைகளுக்கிடையே உள்ள 2ஆவது துண்டு அளவு (மொத்தம் 460 சதுர அடி): கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் – 0 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் – 23.00 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் – 40.00 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் – 44.00 அடி. ஆக இரண்டு துண்டுகளும் சேர்த்து மொத்தப் பரப்பளவு 3140 சதுர அடிக் கொண்ட காலி நிலம் மற்றும் அடிதளப் பரப்பு தரைத்தளம் 3000 சதுர அடி மற்றும் முதல்தளம் 3000 சதுர அடியுடன் கூடிய RCC கட்டடம் உட்பட. இத்துடன் அனைத்து உபகரணங்கள், ஜன்னல்கள், கதவுகள், மேல்கட்டுமானங்கள், மின்சார நிறுவல்கள், குழாய் பொருத்தல்கள், நீர் இணைப்பு, சூரியநிழல் மற்றும் படிக்கட்டுக்கள் முதலானவை சேர்த்து.

நாள்: 30.03.2024, இடம்: கிருஷ்ணகிரி — ஒம்/– காசிபோட்லா குடும்ப ராம்பிரசாத் – அதிகாரப்பூர்வ அலுவலர் – UGRO கேப்பிட்டல் லிமிடெட்

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

லீகல் & சப்போர்ட் டீம், 2வது தளம், கதவு எண்.31, பழைய எண். 14, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

கோரிக்கை அறிவிப்பு

அன்புடையீர்,

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)-ன் விதி 3(1)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழ்காணும் கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பதாவது: 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சாத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் உங்கள் மீது நடவடிக்கை துவக்கியுள்ளது. இவ்வங்கி மேற்படி சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் உங்கள் அனைவருக்கும் கீழ் குறிப்பிட்ட தேதிகளிட்ட கோரிக்கை அறிவிப்பினை ஏற்பு அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் அனுப்பப்பட்ட அந்த நோட்டீஸ் பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்துவிட்டது. இந்த அறிவிப்பினை கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த அறிவிப்பு வெளியான தேதியிருந்த அறுபது நாட்களுக்குள் கீழ்காணும் கடன் பாக்கித் தொகையயை செலுத்திடுமாறு உங்கள் அனைவரிடமும் இதன் மூலம் கோரப்படுகிறது. உங்கள் கடன் கணக்கு ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா வழிகாட்டுதலின் படி வாராகடன் (NPA) என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். தவறினால் மேற்படி சட்டம் பிரிவு 13 மற்றும் உட்பிரிவு (4)-ன்கீழ் வங்கிக்கு இருக்கும் உரிமைகளை கீழ்க்காணும் அடமான சொத்து மீது பிரயோகித்து நீங்கள் செலுத்தவேண்டிய கடன் பாக்கித்தொகையையும், வட்டி மற்ற இதர செலவுகளையும் சேர்த்து வசூலிக்கும் பொருட்டு உங்கள் அனைவர் மீதும் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது மேலும் இந்த அறிவிப்பு வங்கிக்கு இருக்கும் எந்தவொரு தீர்ப்புக்கும் பாதகமின்றி வெளியிடப்படுகிறது என்பது உங்களுக்கு தெரிந்ததே. மேற்படி கடனை அடைப்பதற்கான ஈடாக நீங்கள் அனைவரும் கடன் ஒப்பந்தத்தை கையெழுத்திட்டும் கீழே விவரிக்கப்பட்டுள்ளதற்கான சொத்தின் உரிமை பத்திரங்களை உரியதான முறையில் அடமானம் வைத்தும் ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட் வசம் ஒப்படைத்துள்ளீர்கள். SARFAESI சட்டம் பிரிவு 13 (8)-ன் படி கடன் கொடுத்த வங்கியிடம் கடன் பாக்கி, வட்டி, இதர செலவுகள், கட்டணங்கள், கம்பெனி செலவிட்ட தொகைகள் ஆகியவற்றை சேர்த்து கடனுக்கு ஈடான சொத்தின் விற்பனைக்கு அல்லது உரிமை மாற்றித்தர நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் செலுத்திவிட்டால் அந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது அல்லது உரிமை மாற்றித் தரப்படமாட்டாது என்றும் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

வ.எண்.1 Ref.No.SBB/6474: கடன்தாரர்கள்: 1. M/s. ஸ்ரீ அண்ணாமலையார் எண்டர்பிரைசஸ், அதன் உரிமையாளர் திரு. சிவநேசன், 119A, திருவணப்பட்டி, ஊத்தங்கரை தாலுக்கா, கிருஷ்ணகிரி, தோட்டம்பேட்டை, கிருஷ்ணகிரி - 635 304. 2. திரு. சிவநேசன், த/பெ. திரு. கதிர்வேல், 3. திருமதி. சுகந்தி, க/பெ. திரு. சிவநேசன், இருவரின் முகவரி : 67, திருவணப்பட்டி, ஊத்தங்கரை, திருவணப்பட்டி கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, தமிழ்நாடு - 635 304. கோரிக்கை அறிவிப்பு தேதி: 19.02.2024, கடன் கணக்கு எண்.921030004888960 & 921060050873652, NPA தேதி : 29.01.2024, மொத்த நிலுவை தொகை : 31.01.2024 அன்று வரை உள்ள ரூ.15,90,552.86/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து தொண்ணூறாயிரத்து ஐநூற்று ஐம்பத்து இரண்டு மற்றும் பைசா எண்பத்து ஆறு மட்டும்) (இந்த தொகையானது 31.01.2024 வரை வட்டியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது).

விற்பனை பத்திர எண்.914/2014ன்படி திரு. சிவசேனன் & சுகந்தி ஆகியோர்களால் அடமானம் செய்யப்பட்ட சொத்தின் விவரங்கள் : கிருஷ்ணகிரி பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி தாலுகா, மூக்கம்பட்டி கிராமம், சர்வே எண்.212/1Bன்படி 1.72.0 ஹெக்டேர் கிஸ்தி 1.56 இதில் 0.18 ஏக்கர் நிலங்களில் வால் போஷன்-ல் 0.02 1/2 ஏக்கர், நடைபாதை உரிமைகள் மற்றும் அனைத்து பிற வழக்கமான உரிமைகள் உட்பட. 0.86 ஏக்கரில் ஆவண எண்.534/2018 மற்றும் 306/2019ன்படி 0.68 ஏக்கர் விற்பனை செய்த பின் தற்போது உள்ள பரப்பளவு 0.18 ஏக்கர் நிலங்கள். இந்த மொத்த பரப்பளவில் உள்ள 0.18 ஏக்கர் நிலத்துடன் அனைத்து வழக்கமான நடைபாதை மற்றும் உட்புற, வெளிப்புற வழக்கமான உரிமைகள் உட்பட. இந்த சொத்து ஒட்டப்பட்டி பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்ட மூக்கம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது.

வ.எண்.2 Ref.No.HL/6500: கடன்தாரர்கள்: 1. திரு. ராபார்ட் லாரன்ஸ், த/பெ. திரு. எபிநேசர், 2. திருமதி. எஸ்தர் ராணி, க/பெ. திரு. ராபார்ட் லாரன்ஸ், இருவரின் முகவரி : கதவு எண்.25, நந்தவன எக்ஸ்டிக், பெட்ரபள்ளி, சிப்காட் பேஸ் -2, ஒசூர், கிருஷ்ணகிரி - 635 108. மேலும் : கதவு எண்.13, புதிய எண்.1/72-D, மேல் தெரு, கிகாரிபூர், திருவண்ணாமலை - 606 755. சொத்தின் முகவரி : கதவு எண்.2/246/25, மனை எண்.25, சர்வே எண்.585/6A, நந்தவன எக்ஸ்டிக், மேற்கு கோலிந்த அக்ரஹாரம், நல்லூர் கிராமம், ஒசூர் - 635 126. கோரிக்கை அறிவிப்பு தேதி: 29.02.2024, கடன் கணக்கு எண்.PHR017005697549 & HTR017005697988, (தங்களின் சிட்டி பேங்க் கிரெடிட் கார்டு எண். 4386280529726626 -க்கான நிலுவை தொகைகளை செலுத்த தவறியதால் இந்த கடன் கணக்கு NPA ஆனது) NPA தேதி : 20.01.2024, மொத்த நிலுவை தொகை : 29.02.2024 அன்று வரை உள்ள ரூ.33,53,846/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஆறு மட்டும்) (இந்த தொகையானது 29.02.2024 வரை வட்டியுடன் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது).

PHR017005697549 & HTR017005697988க்கு சொந்தமான சொத்துக்களின் விவரங்கள் : கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஒசூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தாலுக்கா, நல்லூர் கிராம பஞ்சாயத்து மற்றும் ஒசூர் யூனியன் கவுன்சில் எல்லைக்கு உட்பட்ட நல்லூர் கிராமம், சர்வே எண்.585/6ன்படி 0.69.0 தரிசு ஹெக்டேர் மதிப்பீடு ரூ.1.92 துணைப்பிரிவின்படி புதிய சர்வே எண்.585/6Aன்படி 0.53.5 தரிசு ஹெக்டேர், 1.32 ஏக்கர் மதிப்பீடு ரூ.1.48 நிலங்கள் குடியிருப்பு மனைகளாக மாற்றப்பட்டு மனை எண்.25ல் உள்ள 1372 சதுர அடி, எல்லைகள் : கிழக்கில் : மனை எண்.24, மேற்கில் : மனை எண்.26, வடக்கில் : பொது மனைப்பிரிவு சாலை, தெற்கில் : தனியார் சொத்து. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 30 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 46 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 45 அடி. மொத்தம் - 1372 சதுர அடி.

இடம் : சென்னை
தேதி : 30.03.2024

அதிகாரப்பூர்வ அதிகாரி, ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

நிறுவன அலுவலகம்: சோழா கிரெஸ்ட், சூப்பர் B, C54 & C55, 4, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

E–ஏல விற்பனை அறிவிப்பு (e–ஏலம் மூலம் மட்டும்)

கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழான அசையா கடனீட்டுச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் பத்தி (A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனமான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அலுவலரால் பத்தி (D)–இல் குறிப்பிட்டுள்ளபடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே பத்தி (C)–இல் விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களுக்கேற்ப விற்பனை செய்யப்பட உள்ளது.

இந்த அறிவிப்பானது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)–இன் கீழ் பத்தி (A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / சட்டப்படியான வாரிசுகள், சட்டப்படியான பிரதிநிதிகள் (தெரிந்தவர்கள் அல்லது தெரியாதவர்கள் அனைவரும்), செயல்படுத்துவோர், நிர்வாகிகள், அடுத்து வருபவர்கள் மற்றும் தொடர்புடைய கடன்தாரர்களால் / அடமானதாரர்களால் (இறந்திருந்தால்) ஒப்படைக்கப் பெற்றவர்கள் ஆகியோருக்கானது. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனமான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் https://www.cholamandalam.com & https://bankauctions.in இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

வ. எண்	[A] கடன் கணக்கு எண் / கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / பெயர்	[B] திரும்பப் பெறப்பட வேண்டிய நிலுவைத்தொகை (ஈடு வைத்துப் பெற்ற கடன்)	[C] அசையாச் சொத்து / கடனீட்டுச் சொத்து விவரம்	[D] சுவாதீன முறை	[E & F] குறைந்தபட்ச விலை (ரூபாயில்) / டேவணித்தொகை (EMD) (ரூபாயில்)	[G] ஏல நாள் மற்றும் நேரம்
1.	கடன் கணக்கு எண்: HL05KRS000010063 1) சுரேஷ் பெரியசாமி, 2) லக்ஷ்மி பெரியசாமி, 3) பெரியசாமி சின்ன கண்ணன்இருவரது குடியிருப்பு முகவரி:22, கோழிநாயக்கன்பட்டி கிராமம், மேட்டுத்தாங்கல் ஊராட்சி, ஊத்தங்கரை ஒன்றியம், ஊத்தங்கரை வட்டம், கோவில் அருகில், கிருஷ்ணகிரி – 635304.	19.03.2024 நாள்படி ரூ.22,19,876/– (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்தாறு மட்டும்)	கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஊத்தங்கரை சார்பதிவு மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கோழிநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சர்வே எண் 42/2E1, புஞ்சை பரப்பளவு ஹெக். 0.12.0, தீர்வை ரூ.0.29, ஏக்கர் 0.29–1/2 சென்ட், இதிலடங்கிய நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: சாலை, மேற்கு: திரு. செந்தில்குமார் அவர்களின் நிலம், வடக்கு: திரு. சுப்பிரமணி அவர்களின் நிலம், தெற்கு: திரு. ரமேஷ் அவர்களின் நிலம். இவற்றுக்கிடையே உள்ள பரப்பளவு ஏக்கர் 0.14–1/2 சென்ட் கொண்ட நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்டு உள்ள முன்மொழியப்பட்ட கட்டடம் உட்பட. இத்துடன் பொது வழி உரிமைகள் மற்றும் அனைத்து புழக்க உரிமைகள் சேர்த்து. மேற்படி சொத்து மேட்டுத்தாங்கல் கிராம ஊராட்சி எல்லைகள் மற்றும் ஊத்தங்கரை ஒன்றிய அவைக்கு உட்பட்டது.	(சுவாதீனம்)	ரூ.24,80,250/– (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எண்பதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) / ரூ.2,48,025/– (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து இருபத்தைந்து மட்டும்)	29.04.2024 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் ஆவணத்தில் உள்ள விதிமுறைகளின்படி தலா 5 நிமிடம் தானாகக் காலநீட்டிப்புச் செய்யப்படும் வகையில்)

1. ஆய்வு நாள்: 26.04.2024 / 2. குறைந்தபட்ச ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/–

3. ஏலம்/டேவணித்தொகை (EMD) / கலந்து கொள்வதற்கான விண்ணப்பக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் : 27.04.2024 அன்று மாலை 05.00 மணி.

*இத்துடன் தொகை செலுத்தப்படும் மற்றும் / அல்லது பெறப்படும் நாள் வரையிலான கடன் ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகள்படியான உரிய மேல் வட்டி, இடைநிகழ் செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள் முதலானவை.

சொத்து ஆய்வு தொடர்பான அனைத்து உதவிகளுக்கும் ஏல ஆவணம் பெறுவதற்கும் இதர கேள்விகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அலுவலர் :– திரு. சாமுவேல் சாமிதுரை, தொடர்பு கொள்ள வேண்டிய கைப்பேசி எண் – 9500350890, திரு. திருப்பதி G, கைப்பேசி எண் – 8015560190, மின்னஞ்சல் முகவரி: thirupathig@chola.murugappa.com/ திரு. முகமது அப்துல் கவி, கைப்பேசி எண் – 7305990872. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையில் மேற்கண்ட அசையாச் சொத்துக்களின் / கடனீட்டுச் சொத்துக்களின் மீது வில்லங்கங்கள் ஏதும் இல்லை.

நாள்: 28.03.2024 ஒம்/–
இடம்: கிருஷ்ணகிரி, தமிழ்நாடு — அதிகாரப்பூர்வ அலுவலர், சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் சார்பில்